# மார்ச் - 21 - புதன்

## நிக்கோலாஸ் தி புளுயி

"மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள்".
*யோவா. 8:36*

## முதல் வாசகம் : தானியேல் 3 :14 – 20, 91 – 92, 95

அந்நாட்களில் நெபுகத்னேசர் அவர்களை நோக்கி, "சாத்ராக்கு! மேசாக்கு! ஆபேத்நெகோ! நீங்கள் மூவரும் என் தெய்வங்களை வணங்கவில்லை என்பதும், நான் நிறுவிய பொற்சிலையைப் பணிந்து தொழவில்லை என்பதும் உண்மைதானா? இப்பொழுதாவது எக்காளம், நாதசுரம், யாழ், கின்னரம், வீணை, பைக்குழல் முதலிய எல்லாவகை இசைக் கருவிகளும் ஒலிக்கக் கேட்டவுடன், நீங்கள் தாழவீழ்ந்து நான் செய்துவைத்துள்ள சிலையைப் பணிந்து தொழத் தயாராயிருக்கிறீர்களா? தொழாவிட்டால் அந்த நொடியிலேயே எரிகிற தீச்சூளையில் தூக்கிப் போடப்படுவீர்கள். உங்களை என் கைகளிலிருந்து தப்புவிக்கக்கூடிய தெய்வம் ஒன்று உண்டோ?" என்றான். சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேத் நெகோ என்பவர்கள் செபுகத்னேசர் அரசனை நோக்கிப் பதில்மொழியாக, "இதைக் குறித்து நாங்கள் உமக்கு மறுமொழி கூறத் தேவையில்லை. அப்படியே எது நிகழ்ந்தாலும், நாங்கள் வழிபடுகின்ற எங்கள் கடவுள், எரிகின்ற தீச்சூளையினின்று எங்களை மீட்க வல்லவர். அவரே எங்களை உம் கையினின்றும் விடுவிப்பார். அப்படியே அவருக்கு மனமில்லாமல் போனாலும்,அரசரே! நாங்கள் உம்முடைய தெய்வங்களை வழிபடமாட்டோம் நீர் நிறுவிய பொற்சிலையையும் நாங்கள் தொழப்போவதில்லை. இது உமக்குத் தெரிந்திருக்கட்டும்" என்றார்கள். இதைக் கேட்ட நெபுகத்னேசர் அரசன் சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேத்நெகோ ஆகியோர்மீது வெகுண்டெழ, அவனது முகம் சினத்தால் சிவந்தது. வழக்கத்தைவிட ஏழு மடங்கு மிகுதியாகத் தீச்சூளையைச் சூடாக்கும்படி அரசன் கட்டளையிட்டான். பின்னர் சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேத்நெகோ ஆகியோரைக் கட்டி, எரியும் தீச்சூளைக்குள் தூக்கிப் போடுமாறு தன் படைவீரர்களுள் வலியவர் சிலருக்குக் கட்டளையிட்டான். அப்பொழுது நெபுகத்னேசர் அரசன் வியப்புற்று விரைந்தெழுந்து தன் அமைச்சரை நோக்கி, "மூன்று பேரைத்தானே கட்டி நெருப்பினுள் எறிந்தோம்!" என்றான். "ஆம் அரசரே" என்று அவர்கள் விடையளித்தனர். அதற்கு அவன், "கட்டவிழ்க் கப்பட்டவர்களாய் நெருப்பின் நடுவில் நான்கு பேர் உலவுகிறதை நான் காண்கிறேன்! அவர்களுக்கோ ஒரு தீங்கும் நேரவில்லையே! மேலும் நான்காவது ஆள்தெய்வ மகன் ஒருவன் போல் தோன்றுகிறானே!" என்றான். உடனே நெபுகத்னேசர் எரிகிற தீச்சூளையின் வாயிலருகில் வந்து நின்று, "உன்னதக் கடவுளின் ஊழியர்களாகிய சாத்ராக்கு! மேசாக்கு, ஆபேத்நெகோ வெளியே வாருங்கள்" என்றான் அவ்வாறே சாத்ராக்கு, மேசாச்கு, ஆபேத்நெகோ ஆகியோர் நெருப்பைவிட்டு வெளியே வந்தனர். சிற்றரர்களும் அதிகாரிகளும் ஆளுநரும் அரசனுக்கு அறிவுரை கூறுவோரும் கூடிவந்து, அந்த மனிதர்களின் உடலில் தீப்பட்ட அடையாளமே இல்லாமலும் அவர்களது தலைமுடி கருகாமலும் அவர்களுடைய ஆடைகள் தீப்பற்றாமலும் நெருப்பின் புகை நாற்றம் அவர்களிடம் வீசாமலும் இருப்பதைக் கண்டார்கள். அப்பொழுது நெபுகத்னேசர், "சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேத்நெகோ ஆகியோரின் கடவுள் புகழப்படுவாராக! தங்கள் கடவுளைத் தவிர வேறெந்த தெய்வத்தையும் பணிந்து தொழ மறுத்து, அரசனது கட்டளையையும் பொருட்படுத்தாமல், அவர்மேல் நம்பிக்கை வைத்துத் தங்கள் உடலைக் கையளித்த அவருடைய ஊழியர்களை அவர் தம்தூதரை அனுப்பி மீட்டருளினார்" என்றான்.

**பதில்பாடல் :** என்றென்றும் அவரைப் புகழ்ந்து போற்றுங்கள்

## நற்செய்தி : யோவான் 8 : 31 – 42

அக்காலத்தில் இயேசு தம்மை நம்பிய யூதர்களை நோக்கி, "என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள் உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" என்றார். யூதர்கள் அவரைப் பார்த்து, ""உங்களுக்கு விடுதலை கிடைக்கும்" என நீர் எப்படிச் சொல்லலாம்? நாங்கள் யாருக்கும் ஒருபோதும் அடிமைகளாய் இருந்ததில்லை. நாங்கள் ஆபிரகாமின் வழிமரபினர் ஆயிற்றே!" என்றார்கள். அதற்கு இயேசு, "பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். வீட்டில் அடிமைக்கு நிலையான இடம் இல்லை மகனுக்கு அங்கு என்றென்றும் இடம் உண்டு. மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள். நீங்கள் ஆபிரகாமின் வழிமரபினர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் என் வார்த்தை உங்கள் உள்ளத்தில் இடம் பெறாததால் நீங்கள் என்னைக் கொல்ல முயலுகிறீர்கள். நான் என் தந்தையிடம் கண்டதைச் சொல்கிறேன். நீங்கள் உங்கள் தந்தையிடமிருந்து கேட்டதைச் செய்கிறீர்கள்" என்றார். அவர்கள் அவரைப் பார்த்து, "ஆபிரகாமே எங்கள் தந்தை" என்றார்கள். இயேசு அவர்களிடம், "நீங்கள் ஆபிரகாமின் மக்கள் என்றால் அவரைப் போலச் செயல்படுவீர்கள். ஆனால் கடவுளிடமிருந்து கேட்டறிந்த உண்மையை உங்களுக்கு எடுத்துரைத்த என்னை நீங்கள் கொல்ல முயலுகிறீர்கள். ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே! நீங்கள் உங்கள் தந்தையைப் போலச் செயல்படுகிறீர்கள்" என்றார். அவர்கள், "நாங்கள் பரத்தைமையால் பிறந்தவர்கள் அல்ல் எங்களுக்கு ஒரே தந்தை உண்டு கடவுளே அவர்" என்றார்கள். இயேசு அவர்களிடம் கூறியது "கடவுள் உங்கள் தந்தையெனில் நீங்கள் என்மேல் அன்பு கொள்வீர்கள். நான் கடவுளிடமிருந்தே இங்கு வந்துள்ளேன். நானாக வரவில்லை அவரே என்னை அனுப்பினார்" என்றார்.

**தியானம்:** நாடு நாட்டையும், இனம் இனத்தையும், மொழி மொழியையும், பணம் ஏழ்மையையும், ஆண் பெண்ணையும், ஏன்? பெண் ஆணையும்கூட அடிமைப்படுத்தி வாழ்வதையும், அதற்கெதிராக எழும்புகின்ற குரலே 'விடுதலை' என் நாம் அறிகின்றோம். இவை அனைத்தும் மனிதர்தம் மனநிலைகளாலும், செயற்பாடுகளாலும் உருவாக்கப்பட்டவைகளே! ஒரு மனிதன்மேல் இன்னொரு மனிதன் மோலாதிக்கம் செலுத்தும் பொழுது அங்கே 'அடிமைத்தனம்' உருவெடுக்கின்றது. அந்தந்தத் தனித்தனி மனிதர்கள் தம்மிடையே 'புரிந்துணர்வை' ஏற்படுத்தத் தவறும்போது அது 'பகைமையாக' மாறுகின்றது. பகைமை 'பொறுமை'யை இழக்கச்செய்யும்போது அங்கே 'வன்முறை' ஆரம்பமாகின்றது. இந்தச் செயற்பாடுகளே வித்துக்களாக மாறி குடும்பம், இனம், மொழி, நாடு எனப் பரவி இன்று 'அடிமை' நிலைகள் உருவாகவும், அதற்கெதிரான 'விடுதலை' எனும் குரல் உலகெங்கும் ஓங்கி ஒலிக்கவும், அது வன்முறையெனும் தீயாக உலகெங்கும் பற்றி எரிவதையும் நாம் காண்கின்றோம். இந்தத் தீயில் 'அரசியல்' என்னும் எண்ணை ஊற்ற அவை மேலும் கொழுந்து விட்டெரிவதையும் நாம் அன்றாடம் அறிகின்றோம். இவை அனைத்திற்கும் ஒரே மருந்தாக இன்று இறைமகன் இயேசு நமக்குத் தரும் நற்செய்தி அமைகின்றது. "என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள்: உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" என்பதே அந்த அருமருந்து. இதன்மூலம் நம் பாவப் பழக்கவழக்கங்களிலிருந்து நாமும் விடுதலை பெறுவதோடு, தனி மனிதர்களாக, சமூகமாக, இனமாக விடுதலைபெற உழைப்போம். அரசியல் எனும் சாக்கடையிலிருந்து வெளியேறுவோம். 'கனேடியப் பிரதமர் வேட்டி கட்டினால், தமிழனுக்கு விடுதலை' போன்ற பிரமைகளிலிருந்து மீழ்வோம். இறைவார்த்தையையே வாழ்வாக்குவோம்.